RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2125

# இலக்கியத்தில் நட்பு

**ச. திவ்யபாரதி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), சேலம்-636007, தமிழ்நாடு, இந்தியா.

# Friendship in literature

**C. Divyabharathi** [a, *]

[a] Department of Tamil, Government Arts College, (Autonomous) Salem-636007, Tamil Nadu, India.

* Corresponding Author: jagan25021987@hotmail.com

Received : 30-09-2020
Revised : 05-02-2021
Accepted : 05-02-2021
Published : 13-03-2021

Check for updates

**ABSTRACT**

Various relationships complement human life. The majority of such relationships may be some kind of blood relationship or a forced relationship. But only a relationship of 'friendship' is chosen according to man's will. It is strengthened based on properties. Our literature highlights such friendships in as number of ways. Also, this article is unique in that it tells you how to maintain good friendships, how to accept acceptable friendships, and how to maintain good friendships.

**Keywords:** Friendship, Human life, Relationship, Literature

## ஆசிரியர் குறிப்பு



ச. திவ்யபாரதி அவர்கள், சேலம் அரசு கலைக் கல்லூரி, (தன்னாட்சி) தமிழ்த்துறையில் பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டு வருகின்றார். இளங்கலை பட்டப்படிப்பை சேலம் அரசு மகளிர் கலைக் கல்லூரியிலும், முதுகலை மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்புகளை சேலம் ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரியிலும் முடித்துள்ளார். முதுகலை பட்டத்தின் பொழுது ஒரு கருத்தரங்கிலும், ஒரு திட்ட கட்டுரையிலும் அவரது படைப்புகளை சமர்ப்பித்துள்ளார்.

## முன்னுரை

தொன்மை வாய்ந்த நம் தமிழ்மொழியினை பல்வேறு இலக்கியங்களும்இலக்கணங்களும் நாள்தோறும் வளர்த்துக் கொண்டே வருகின்றன. இதில் இலக்கியங்களானது மனிதனின் மனதை பக்குவப்படுத்துவதற்காக பல்வேறு வழிமுறைகளை கையாண்டு வருகின்றது. மேலும், மனித உறவுகளின் மேன்மையையும் இலக்கியங்கள் வழியாக நாம் அறியலாம். அவ்வாறான உறவுகளுள் மிக அழகான ஒன்றுதான் 'நட்பு' என்னும் உறவு ஆகும். 'நட்பு' குறித்து பல்வேறு இலக்கியங்கள் பல்வேறு செய்திகளையும் அதற்கான பல மன்னர்கள் காலம் முதல் இன்றுவரை நம் இலக்கியங்கள் காட்டும் நட்பானது நம்மை நெகிழவைப்பதாக உள்ளது. இதற்குச் சிறந்த சான்றாக, கோப்பெருஞ்சோழன்-பிசிராந்தையார் நட்பு மற்றும் ஔவையார்-அதியமான் நட்பு போன்றவற்றைக் கூறலாம். நட்பு என்பது ஆண்-பெண் என்ற பாலினம், முதியவர்-இளையவர் என்ற வயது பாகுபாடு ஏழை-பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு ஆகிய பாகுபாடுகளையும் தாண்டி மனதளவில் தோன்றும் ஓர் உன்னத உறவாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக மனிதர்கள் இறைவனிடம் கொண்ட நட்பையும் நம் இலக்கியங்கள் சான்றுகாட்டுகின்றன. இத்தகைய நட்பானது, இலக்கியத்தில் இடம்பெற்றவிதம் பற்றியும், நட்பின் வகைகளையும் குறித்து இக்கட்டுரையானது அமைக்கப்பட்டுள்ளது.

## நட்பு- விளக்கம்

மனித மனம் விரிவடைய துணை நிற்பது நட்பாகும். சங்ககாலம் முதல் இக்காலம் வரை உயிர்களிடத்தில் நட்பு மேலோங்கி நிற்கிறது.

மேலும், உயர்திணையாயினும், அஃறிணையாயினும் எவ்வுயிரும் தனித்து வாழ்வது இல்லை. மனிதர்களும் விலங்குகளும், பறவைகளும் தனக்கென ஒரு குழுவை அமைத்துக் கொள்கின்றன.

பறவைகள் சேர்ந்து கூட்டம் கூட்டமாக பறக்கின்றன. மனிதர்கள் ஒருவருக்கொருவர் நட்புக்கொண்டு எண்ணங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர். காட்டில் விலங்குகள் கூடி வாழ்கின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த நட்பையே சங்ககாலப் புலவர்களும் போற்றியுள்ளனர் என்பதற்குத் தமிழ் இலக்கியங்கள் சான்றுகளாக அமைந்துள்ளன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நட்பிற்கு விளக்கம் தரும் வகையில்,

**'நட்பு என்பதற்கு இருவர்மனம் வேற்றுமையின்றிக்**

**கலத்தலாலுண்டாவதொரு சிறந்த குணமாகும்'**

புறநானூற்றில் மனித மேம்பாட்டு கருத்துக்கள் [பக்.65]

என்பார் பி. வெ.சுசிலா. மேலும், நட்பு என்பதற்கு,

**'துணை அண்ணனி, அண்மைசார்பு, குறுமை,**

**நெருக்கம், இடுக்கிடை, இட்டம், இட்துடி, இணக்கம்,**

**இஞ்சகம், ஈரம், ஈறல், உடங்கு, உட்பாடு,**

**உடந்தை, கேண்மை, கேள், தொடர்பு,**

**உசாத்துணை, தோழமை, உய்தம்'** (தமிழ் சொற்றொடர் அகராதி. பக்.269)

என்று தமிழ் சொற்றொடர் அகராதி பொருள் விளக்கம் தருகின்றது.

## நட்புகொள்ளும்முறை

ஒருவர் மற்றவர்களிடம் நட்புக் கொள்ளும் போது அவர் குணநலன்களை ஆராய்ந்து நட்புக் கொள்வதே சிறந்த நட்பாகும்.

இதனை வள்ளுவர்,

**'குணனும் குடிமையும் குற்றமும் குன்றா**

**இனனும் அறிந்தியாக்க நட்பு'** குறள்- 793

என்கிறார். ஒருவனுடைய குணம் குடிப்பிறப்பு, குற்றங்களை ஆராய்ந்து பின்பு நட்பு கொள்ள வேண்டும் என்பன போன்ற பல கருத்துக்களை இனியவை நாற்பது உணர்த்துகின்றன (Thanga Pazhamalai, 2010). இதனை,

**'நில்லாத காட்சி நிறையில் மனிதரைப்**

**புல்லா விடுதல் இனிது'** (இனியவை நாற்பது பா.எ.25)

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன. நல்ல குணங்கள் இல்லாதவர்களிடம் நட்புக் கொள்ளக் கூடாது. மனிதன் பிற மனிதனுக்கு பயன்படக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும். பிறர் துன்பத்தை நீக்குபவனாகவும், வறியவருக்கு பொருள் வழங்க கூடியவனாகவும், மற்றவர்களுக்கு நன்மை செய்பவனாகவும் இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத மனிதனை கபிலர்,

**'நன்மை இலாளர் தொடர்பு இன்னா'** (இன்னாநாற்பது-பா.எ.32)

என்பதால் நண்பர்களை ஆராய்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்கிறார். இதே போன்று,

**'பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை**

**பெருகலிர் குன்றல் இனிது'** (குறள் 811)

நல்ல குணங்கள் இல்லாதவர் அன்பினால் சிறந்து விளங்குவதாக இருந்தாலும், அவர்களுடன் நட்புக் கொள்ளக்கூடாது என்று குறிப்பிடுவதை அறிகின்றோம்.

## நட்பைக்காத்தல்

'நட்பு' என்பது மனிதர்களிடையே ஒற்றுமையை வளர்கின்ற ஓர் அடிப்படைக் கருவியாகும். மேலும், அனைவரின் நட்புமே நெருக்கமான நட்பாக அமைவதில்லை. இதனை அறநூலில் சொ. பரமசிவம் அவர்கள்,

**'ஒருவன் நெருங்கிய நண்பனாக இல்லாமல் இருக்கின்றானே**
**என்பதை விட அவன் பகைவனாக இல்லாமல் இருக்கின்றானே**
**என்பது மகிழ்ச்சிக்கு உரியதாகும்'** (அறநூல்கள்- பா.448)

என்று கூறியுள்ளார் (Paramasivam, 1993). அத்தகைய நட்பும் குற்றமற்றவரிடமே கொள்ள வேண்டும். மேலும், அவ்வாறு பெற்ற நட்பையும் இறுதிவரை காத்தல் வேண்டும். இதனை,

**'மருவுகமாசற்றார்கேண்மை'** (நீதிநூல்கள்- பா.45)

என்ற வரிகள் விளக்குகின்றன. 'நட்பு' என்பது எண்ணங்கள், பண்புகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை பொறுத்தே நிரந்தரமானதாக அமையும் (Periyannan, 2006). ஒருவரைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் அவரது நண்பனின் பண்புகளையும், பழக்கவழக்கங்களையும் கொண்டே அவர் எத்தகைய மனப்போக்கு கொண்டவர் என்பதை ஓரளவு கணித்துவிட முடியும். வெவ்வேறு பண்புகள் கொண்ட நண்பர்கள் தங்கள் நட்பை விரைவில் கைவிட நேரிடும். எனவே, தம்மிடம் நட்புக் கொண்டவர்க்கு இனியவற்றைச் செய்தல் மிக இனிது என்றும், இவற்றினும் மேலான இனிய செயலானது தம்மிடம் நட்புக் கொண்டவரை புறங்கூறாதவனாய் வாழ்தலே என்று ஆசிரியர் கூறியுள்ளார். இதற்குச் சான்றாக,

**'நட்டார் புறங்கூறான் வாழ்தல் நனிஇனிதே'** (இனியவைநாற்பது, பா.எ.19)

என்ற வரியானது இனியவையில் அமைந்துள்ளது. இவ்வாறே,

**'வீரன் கேண்மை கூரம்பு ஆகும்'** (நீதிநூற்கொத்து கொன்றைவேந்தன்பா.84)

என்றமைந்த வரியின் மூலம், வீரனுடைய நட்பானது கையில் கூர்மையான அம்பு வைத்திருப்பதற்கு ஒப்பாகும் என்ற கருத்தினை நீதிநூற்கொத்து வெளிப்படுத்துகிறது. அதாவது, கூர்மையான அம்பு தனக்கு எப்போதுமே துணையாக நிற்கும். எனவே, வீரன் கூர்மையான அம்பினை விரும்பி ஏற்பான். அத்தகைய அம்பானது அவனுக்கு உற்றதுணையாய் விளங்குவதை உணர்ந்து அவன் அதை தன்னிடமே கொண்டிருப்பான். இதைப்போன்றதே நல்லோர் நட்பு ஆகும். அதாவது, கூர்மையான அம்பினை நல்ல நண்பனுக்கு இணையாக இங்கு காட்டப்பட்டுள்ளது (Matiyaracu, 1999).

இதேபோன்று, வள்ளுவர் நட்பிற்கு இலக்கணம் கூறும்போது, ஒருவன் தன் இடுப்பில் உள்ள ஆடை அவிழும் பொழுது அவனது கை தானாகவே விரைந்து சென்று அவ்வாடையைக் கட்டிக்காப்பது போன்று, நண்பனுக்குத் துன்பம் நேரும் பொழுது தானாகவே விரைந்து சென்று அவனை அத்துன்பதிலிருந்து நீக்குவதே சிறந்த நட்பாகும் என்பதனை,

**'உடுக்கை இழந்தவன் கைபோலஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு'** குறள்-788

என்று உரைக்கிறார். இத்தகைய தன்மையுடைய நட்புக்

கொண்டவர்களைப் பிரியாது இருத்தல் பற்றி நன்னெறி விளக்குகின்றது. இதில், நெல்லின் உமி அதனை விடுத்து சிறிது விலகி மீண்டும் முன்போலவே கூடினாலும் அந்நெல்லானது முளைக்கும் தன்மையை இழந்துவிடும். அதுபோல, நெருக்கமாக இருந்த நண்பர்கள் பிரிந்து மீண்டும் நட்புக் கொண்டால் அது பெருமைக்குரியதாய் இருக்காது என்ற கருத்தினை,

**'நெல்லின் உமி சிறிது நீங்கிப்பழைமைபோற்**

**புல்லினுந்திண்மை நிலைபோம்'** (நீதிக்களஞ்சியம் நன்னெறி-பா.5)

என்றவரிகள்கொண்டுள்ளது. இவ்வாறு அவ்வையார் தம் ஆத்திசூடியிலும்,

**'கூடிப்பிரியேல்'** (நீதிக்களஞ்சியம் அவ்வையார் ஆத்திசூடி பா.37)

என்று கூறியுள்ளார். அதாவது, ஆராய்ந்தறிந்து தெளிவான அறிவும், அனைவரும் போற்றும் நற்குணமும் உடைய கற்றறிந்த சான்றோரிடம் நட்பு கொண்ட பிறகு, அவர்களை விட்டுப்பிரிவதை விட்டு விட வேண்டும் என்ற கருத்து இதில் கூறப்பட்டுள்ளது (Venkatacami Nattar, 1927).

## கூடாநட்பு

மனிதன் கூடி வாழும் சமூக விலங்காகவான். அவனின் மனநிலை ஒன்றுக்கொன்று அன்பை பரிமாறிக் கொள்கின்றன. இனம், மொழி, மதங்களைக் கடந்து உள்ளங்கள் இணையும் பொழுது நட்பானது மலர்கின்றது. சிறந்த நட்பானது தன்னிலை பாராது செயல்படுவதாகும்.

ஒரு மனிதனின் பண்புகளை அளவிடுவதற்கு அவன் கொண்ட நட்பே சிறந்த கருவியாக அமைகிறது. எனவே, உயர்ந்த குணமுள்ளவர்களை விடுத்து தாழ்வான மற்றும் கீழான குணம் உடைய சிறியோர்களோடு நட்பு கொண்டால் அது தீமையையே விளைவிக்கும். எனவே, இத்தன்மையுடைய நட்பினை கைவிடுதல் மேலானதாகும். நட்புக்கொள்ளும் போது ஏற்கக்கூடிய நட்பைப் போல சில நீக்க வேண்டிய நட்பு முறைகளும் காணப்படுகின்றன. இக்கருத்தை வெளிப்படுத்தும் விதமாக திருக்குறளில் 'கூடாநட்பு' என்ற தனி அதிகாரமே அமைந்துள்ளது. இதில் முகத்தளவில் நண்பர்கள் போன்று இனிக்கப்பழகி மனதளவில் நமக்குத் தீமை விளைவிக்கத் திட்டமிடும் வஞ்சகர்களை இனம் கண்டு விலக்குதல் வேண்டும் என்ற கருத்தினை,

**'முகத்தளவில் இனியநகாஅ அகத்துஇன்னா**

**வஞ்சகரை அஞ்சப்படும்'** (குறள் 824)

என்ற குறள் விளக்குகிறது. எனவே, நட்பைத் தேர்ந்தெடுக்கும் போது நன்கு ஆராய்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுத்த நல்ல நட்பினை உயிரினும் ஓம்பிக் காத்தல் வேண்டும். ஒருவேளை கிடைத்த நட்பு தீயதை விளைவிப்பதாக இருக்குமானால் அதை விட்டு விலகுதலே நன்று ஆகும். அதேபோன்று, இனியவைநாற்பதும் வஞ்சகரைச் சேராமல் நீக்குதல் இனிது என்றும் மறந்தும் கூட நற்குண நற்செயல்கள் இல்லாத அறிவில்லாதவர்களைச் சேராத வழிகளை ஆராய்ந்து அறிந்து வாழ்தல் இனிது என்றும் குறிப்பிடுகின்றது. இதனை,

**'மறந்தேயும் மாணா மயரிகள் சேராத்**

**திறம்தெரிந்து வாழ்தல் இனிது'** (இனியவைநாற்பது பா.எ.21)

என்ற பாடல் வரிகள் தெரிவிக்கின்றன. ஏனெனில், குடம் நிறைய

பாலில் ஒரு துளி விடம் கலப்பினும் அது முழுவதும் நஞ்சாக மாறிவிடும். அதுபோல, நற்செயல் அல்லாதவர்கள் தீயகருத்துக்களையே மனதில் என்றும் சுமந்திருப்பர். அத்தகையோரிடம் நட்பு கொண்டால் அது நல்லவர்களின் வாழ்வையே சீரழிப்பதாக ஆகிவிடும். எனவே, நற்குணத்தை நாடாத தீயவர்களை நட்பு கொள்ளாமல் விலகி இருப்பதே நன்றாகும். மேலும், நிலையில்லாத அறிவினையும் தனது நெஞ்சினை ஒரு வழியில் நிலை நிறுத்தாதவனுமாகிய கீழான மனிதரைச் சேராது இருத்தல் மிக இனிது என்பதை,

**'நில்லாத காட்சி நிறையில் மனிதரைப்**

**புல்லாவிடுதல் இனிது'** (இனியவைநாற்பது பா.எ.25])

என்ற வரிகள் சுட்டுகின்றன. இவ்வாறே இனியவைநாற்பதில் சூதாடிகள், கயவர்கள் போன்றோருடன் நட்புக்கொள்ளுதல் கூடாது என்று உறுதியாகக் கூறுகின்றது. இதேபோல் வெற்றிவேற்கையிலும், கீழ்மக்களோடு நூறாண்டுகள் பழகி நட்புகொள்ள முயன்றாலும், நீருக்குள்ளே வேர் ஊன்றாத பாசியைப் போல நட்பு பலப்படாது என்பதனை,

**'நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை**

**நீருக்குள் பாசிபோல் வேர்க்கொள்ளாதே'** (நீதிநூல்கள் பா.33)

என்ற வரிகளால் அறியலாம்.

மேலும், பேசுவதற்கு இனிமையான சொற்கள் மிகுதியாக இருக்கும்போது, துன்பம் ஏற்படுத்தும் கடுமையான சொற்களை பேசுவோரின் நட்பை நீக்க வேண்டும் என்ற கருத்தில் இன்னா- இனியவை நாற்பதில் பல ஒன்றுபட்ட கருத்துக்களும், பலவேறுபட்ட கருத்துக்களும் காணப்படுகின்றன.

**'கடுமொழியாளர் தொடர்பின்ன இன்னா'** (இன்னாநாற்பது-பா.எ.3)

என்ற கபிலரின் வரிகளில், கடுமையான தீங்கு விளைவிக்கக் கூடிய சொற்களை பேசுவோரிடம் நட்புக் கொள்ளக்கூடாது என்பது தெளிவாகின்றது. இவ்வாறே,

**'ஆக்கம் அழியினும் அல்லவை கூறாத**

**தேர்ச்சியின் தேர்வு இனியதுஇல்'** (இனியவைநாற்பது பா.எ.28)

என்று இனியநாற்பது உணர்த்துகின்றது. அதாவது, தன்னுடைய செல்வம் அழியும் நிலையிலும் கூட கடுஞ்சொற்களைப் பேசாத இனிய குணம் கொண்டவரிடம் நட்பு கொள்ள வேண்டும் என்பது இதன் கருத்தாகும். மேலும், தம்மிடம் பொருள் உள்ள போது நட்பு கொள்ளுவதும் தம்மிடம் பொருள் அழிந்த போது தம்மை விட்டு நீங்குவதுமாக உள்ள மனிதரிடம் நட்புக் கொள்ளக்கூடாது. எந்த சூழலிலும் மனிதன் ஒரே நிலையாக இருத்தல் வேண்டும். செல்வப் பெருக்குடைய காலத்து சேர்ந்திருந்து வறுமையுற்ற போது பிரிந்து செல்லும் நண்பரின் நட்பானது தலைவன் தன்னுடன் இருந்த காலத்தில் தலைவியின் கையில் செறிவாக இருந்த வளையல், அவன் பிரிந்தவுடன் கழன்று ஓடும் தன்மை போன்றதாகும். இவ்வாறு கலித்தொகையிலும்,

**'ஈங்குநீர் அளிக்குங்கால் இறைசிறந்து ஒருநாள்நீர்**

**நீங்குங்கால் நெகிழ்பு ஓடும்வளை எனவும்உளஅன்றோ**

**செல்வத்துள் சேர்ந்தவர் வளன் உண்டுமற்றுஅவர்**

**ஒல்கத்துநல்கிலாஉணர்விலால்தொடர்புபோல்'** (கலித்தொகை பா.25)

என்ற நட்பினை உணர்த்தும் வரிகள் அமைந்துள்ளன (Manikkanar, 1999). இதில் செல்வம் இருக்கும் பொழுது சேர்வதும், நீங்கியபொழுது விலகுவதுமாக இருப்பவர்களிடம் நட்புக் கொள்ளக்கூடாது என்பதை உணர்த்துகிறது. எனவே, இவற்றின் மூலம் நட்புக் கொள்ளத்தக்கவர்களை நம் இலக்கியங்கள் அடையாளம் காட்டுகின்றன எனலாம். மேலும்,

**'இடன்இல் சிறியரோடு யாத்தநண்புஇன்னா'** (இன்னாநாற்பது பா.எ.11)

என்பதால் ஒருவரிடம் நட்புக் கொள்ளும்போது அவர்களின் குணங்களை ஆராய்வதோடு, தம்மைவிட அறிவு முதிர்ச்சி இல்லாத சிறியவர்களோடு நட்பு கொள்ளக்கூடாது என்ற கபிலரின் கூற்றும் இங்கு எண்ணத்தக்கது. அனைத்திற்கும் மேலாக திருக்குறளில் நட்பு குறித்து குறிப்பிடும் வகையில்,

**'முகநக நட்பது நட்புஅன்று நெஞ்சத்து**

**அகநக நட்பது நட்பு'** (குறள் 786)

என்ற வரிகளில், முகம் மட்டும் மகிழ நட்புக் கொள்வது நட்பாகாது உளமார நட்புக் கொள்வதே சிறந்த நட்பாகும் என்று நட்பிற்கு வள்ளுவர் அளிக்கும் விளக்கம் இங்கு சிறந்த கருத்தாக அமைந்துள்ளது.

## முடிவுரை

நட்பு என்பது மனிதனை பக்குவப்படுத்தும் ஓர் உன்னதமான உறவாகும். அப்படிப்பட்ட நட்பானது நம் இலக்கியங்களில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதையும், பல நூலாசிரியர்களின் கருத்துக்களையும் தன்னகத்தே எவ்வாறு பெற்று நட்பானது சிறப்பிக்கப்படுகிறது என்பதையும் இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது. மேலும், நட்பு எவ்வாறு அமைய வேண்டும் என்றும், ஏற்கக்கூடிய நட்பு, கூடாநட்பு என்ற நட்பின் வகைகளும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன. இறுதியாக, மனிதனுக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்கும் நட்பின் தன்மைகளையும் இக்கட்டுரை எடுத்தியம்பியுள்ளது. உலகில் மனிதன் தோன்றிய காலம் முதலாகவே அவனோடு விளங்கிய உறவுகளுள் நட்பும் ஒன்றாகும். இவ்வாறான நட்பு குறித்து நமது பல இலக்கியங்கள் பல இடங்களில் சிறப்பித்துள்ளன. அவ்வகையில் நம் தமிழ் இலக்கியங்களில் சிலவற்றைச் சான்று காட்டி அவை நட்பின் இயல்பைக் கூறும் விதத்தையும், நட்புக் கொள்ளும் முறை குறித்தும் எவ்வாறு சிறப்பிக்கிறது என்ற கருத்து இக்கட்டுரையில் முதன்மைப் பெறுகிறது. மேலும், நல்லநட்பு, கூடாநட்பு என்ற இருவகைகளை உணர்த்திய விதம் இக்கட்டுரைக்கு அழகுசேர்த்துள்ளது. இதோடு, நல்ல நட்பைக் காத்து ஓம்பும் தன்மையை விளக்கியுள்ள விதம் போன்ற பல செய்திகளை எடுத்துரைப்பதால், நட்பின் அழகைக் காட்டும் கண்ணாடியாகவே இக்கட்டுரையானது அமைந்துள்ளது என்பது உறுதிப்படுகிறது.

## References

Manikkanar, A., (1999) Kalittokai, 1st ed., Varttamāṉaṉ Publication, Chennai, India.

Matiyaracu, (1999) Niti nul kottu, 1st ed., kurinci Publication, Chennai, India.

Paramasivam, S., (1993) Aranul, 1st ed., Mattu Pathippagam, Chennai, India.

Periyannan, G., (2006) Niti nulkaḷ, 1st ed., Vanitha Publishing House, Chennai, India.

Thanga Pazhamalai, (2010) Thirukural Nayavurai, 8th ed., Arulmozhi Publication, Thirukovalur, India

Venkatacami Nattar, N.M., (1927) Auvaiyar Aruliya Nalvali, 2nd ed., South India Saiva Siddhanta Works Publishing Society, Tirunelveli, India.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License